# தமிழ்ச்சோலை

## நான்காம் பருவம்




முனைவர் அ.மகபுபூ

தமிழ்த்துறை

நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)

பொள்ளாச்சி - 642 001

Language: Tamil

# Thamizh Cholai

**Semester IV**

Author: **Dr. A.Mahabobu**
Tamil Department
**Nallamuthu Gounder Mahalingam College, (Autonomous)**
**Pollachi - 642 001**

First Edition : December, 2023
Copyright : Publisher
No.of Pages : 140
Publisher:
**New Century Book House Pvt. Ltd.,**
41-B, SIDCO Industrial Estate,
Ambattur, Chennai - 600 050.
Tamilnadu State, India.
Email: info@ncbh.in
Online: www.ncbhpublisher.in
ISBN: 978 - 81 - 2344 - 577 - 9
Code No. A4957

**₹ 200/-**

## Branches

**Ambattur** 044- 26359906, **Spenzer Plaza (Chennai)** 044-28490027 **Trichy** 0431-2700885 **Pudukkottai** 04322- 227773 **Thanjavur** 04362-231371 **Tirunelveli** 0462-4210990, 2323990 **Madurai** 0452-2344106, 4374106 **Dindigul** 0451-2432172 **Coimbatore** 0422-2380554 **Erode** 0424-2256667 **Salem** 0427-2450817 **Hosur** 04344-245726 **Krishnagiri** 04343-234387 **Ooty** 0423-2441743 **Vellore** 0416-2234495 **Villupuram** 04146-227800 **Pondicherry** 0413-2280101 **Nagercoil** 04652-234990

## தமிழ்ச்சோலை

நான்காம் பருவம்

ஆசிரியர்: முனைவர் அ.மகபுபூ
தமிழ்த்துறை
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, (தன்னாட்சி)
பொள்ளாச்சி - 642 001

முதல் பதிப்பு : டிசம்பர், 2023
*அச்சிட்டோர்: பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்.,*
*16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 14*
☎: 044 - 28482441

All rights reserved. No part of this book may be reprinted or reproduced or utilised in any form or by any electronic, mechanical, or other means, now known or hereafter invented, including photocopying and recording, or in any information storage or retrieval system, without permission in writing from the publishers.

16. முதுமொழிக்காஞ்சி 7 (பொய்ப்பத்து)

17. ஏலாதி 40 (உடையாமை)
42 (கொல்லா னுடன் படான்)

18. இன்னிலை 8 (தூயசொல்)
9 (கடன்முகந்து தீம்பெயலை)

## II உரைநடை

1. காரைக்காலம்மையார் கவிதைகள் - விக்ரமாதித்யன்
2. ஷெல்லியும் பாரதிதாசனும் - கு.வெ. பாலசுப்பிரமணியம்
3. திருவாசகத்தின் மாணிக்கவாசகரின் பக்திநெறி - முனைவர் ப. அருள்ஜோதி
4. திருக்குறள் காட்டும் ஆளுமைத்திறன் - பேரா. ர.சூர்யா
5. கவிஞர் சிற்பியின் கவிதை மொழிபெயர்ப்புத்திறன் - முனைவர் இரா. ஜெயந்தி
6. நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகள் - முனைவர் ந. ஜெயசுதா
7. காலந்தோறும் பருவநிலை மாற்றங்கள் - முனைவர் ந. பிரகாஷ்
8. பட்டுக்கோட்டைக் கல்யாண சுந்தரனாரின் தமிழ்ப்பணியும் தேசப்பற்றும் - முனைவர் ம.சித்ரகலா

## III இலக்கணம்

1. வாக்கிய வகைகள்
தன்வினை, பிறவினை
செய்வினை, செயப்பாட்டு வினை.
2. சொல்லின் வகைகள்
பெயர்ச்சொல், வினைச்சொல்,
இடைச்சொல், உரிச்சொல்,
இயற்சொல், திரிசொல்,
திசைச்சொல், வடசொல்

## IV இலக்கிய வரலாறு

1. சங்க இலக்கியம்
2. தமிழில் நீதி நூல்கள்
3. நாடகத் தமிழ்
4. மொழிபெயர்ப்பியல்

## V நாடகம் படைப்பாக்கத்திறன் - மொழிபெயர்ப்பு (ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு)

1. சந்திரகிரி - பம்மல் சம்பந்த முதலியார்
2. படைப்பாக்கம் மொழிபெயர்ப்பு

# 6. நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகள்

- முனைவர் ந. ஜெயசுதா
தமிழ் உதவிப் பேராசிரியர்

நாட்டுப்புற மக்களால் வழிவழியாக நம்பப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் வருகின்ற நம்பிக்கைகளே நாட்டுப்புற நம்பிக்கைகளாகும். பெரும்பாலான நம்பிக்கைகள் நாட்டுப்புற மக்களாலேயே உருவாக்கப்பட்டும் ஒரு தலைமுறையினரிடம் இருந்து அடுத்த தலைமுறை யினருக்கு வழங்கப்பட்டும் வருகின்றன.

பிறப்பு முதல் இறப்பு வரையும், இறந்த பின்னும் நம்மோடும் நம் வாழ்வோடும் நம்பிக்கை என்பது பயணம் செய்கின்றதை கண்கூடாகக் காண்கிறோம். நம்பிக்கை குறித்து ஹெலன் ஜான்சன், "நம்பிக்கைகள் எழக் காரணமாயிருந்த நிகழ்ச்சிகள் உண்மையாகவோ, பொய்யாகவோ இருக்கலாம். ஆனால் நம்பிக்கை இருப்பது உண்மை அவை மெய்ப்பிக்கத் தக்கவை" என்கிறார்.

அறிவியல் தொழில்நுட்பம் நன்கு வளர்ந்துள்ள இக்காலகட்டத்திலும் மக்கள் இன்றும் பழைய நம்பிக்கைகளையும் சடங்குகளையும் பின்பற்றுகின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். காரணம் பழைய நம்பிக்கையாக இருந்தாலும் நம் வாழ்வில் பல நன்மைகள் ஏற்பட வழிவகை செய்கிறது எனலாம். ஏராளமான நம்பிக்கைகளில் சிலவற்றை இக்கட்டுரையில் காண்போம்.

**காலந்தோறும் நம்பிக்கைகள்:**

நம்பிக்கை என்பதற்கு விசுவாசம், ஆணை, உண்மை, சத்தியம், நிசம், உறுதிப்பாடு என்று மதுரைத் தமிழ்ப் பேரகராதி பல்வேறு பொருளைத் தெரிவிக்கின்றது.

"நம்பிக்கைகள் பெரும்பாலும் அச்சவுணர்வின் அடிப்படையாகத் தோன்றியதாகக் காட்சியளித்தாலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உணராத பொழும் மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத பொழுதும் மனித மனமானது சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவைகளே நம்பிக்கைகளாக உருவாகின்றன" என்கிறார் டாக்டர் சு. சக்திவேல் அவர்கள். மேலும், அமெரிக்கக் கலைக் களஞ்சியம், ஒரு பிரச்சனையின் மூலமாக நாம் தெரிந்து கொள்ளும் உண்மையை விரும்பி ஏற்றுக் கொள்ளுதலே பொதுவாக நம்பிக்கை எனப்படும். ஆனால் நுட்பமகவும், சமயரீதியாகவும் பார்க்கும் பொழுது ஒரு மனிதனின் மனத்திண்மையையும், விருப்பத்தையும் பொறுத்தே நம்பிக்கை அமைகிறது என விளக்கமளிக்கிறது.

நம்பிக்கைகளே மனித வாழ்வினை இயக்குகின்றன. தனிமனித நம்பிக்கை காலப் போக்கில் சமுதாய நம்பிக்கையாக மாற்றம் பெற்றுள்ளது.

'நம்பினார் கெடுவதில்லை' என்ற பொன்மொழிக்கு ஏற்ப நாட்டுப்புற நம்பிக்கைகள் மக்கள் மனதில் பதிந்திருப்பதை இன்றளவும் காணமுடிகின்றது.

**இறை நம்பிக்கை:**

தந்தையோடு கடைவீதிக்குச் செல்லும் குழந்தை தந்தையின் சுண்டுவிரலைப் பிடித்துக் கொள்கிறது. அந்த சின்ன ஒரு பற்றுதல் அக்குழந்தைக்கு அதிகமான நம்பிக்கையைத் தருகிறது. தந்தை தன்னைக் கைவிடமாட்டார். தந்தை தன்னைப் பாதுகாத்துக் கொள்வார் என குழந்தை சந்தேகத்திற்கு இடமின்றி நம்புகிறது. தந்தை மீது அந்தக் குழந்தை வைக்கும் நம்பிக்கைக்குக் காரணம் என்ன? தந்தையின் சுண்டு விரலின் வலிமையா? இல்லை. குழந்தை தந்தையை அறிந்திருக்கிறது என்பது தான்.

அதே போல, தான் இறைவனிடம் நாம் வைக்கும் நம்பிக்கைக்கு 'அவர் எப்படிப் பட்டவர்' என்பதை நாம் அறிந்து கொள்வதில் தான் அடங்கியிருக்கிறது. இறைவனின் தன்மைகளை முழுமையாக அறிந்து கொண்ட முன்னோர்கள் இறைநம்பிக்கையுடன் வாழ்ந்தனர். அவ்வாறே நாமும் பின்பற்றுகிறோம்.

இறை நம்பிக்கை குறித்தான ஒரு கதை.

சீடன் ஒருவன், "குருவே! இறைநம்பிக்கை இல்லாமல் நம்மால் நேர்வழியில் செல்ல முடியாதா? என்று சந்தேகம் கேட்டான்.

"சமயம் வரும்போது சொல்கிறேன்" என்றார் குரு.

ஒரு நாள் அந்தச் சீடன், ஆசிரமப் பசுவை மேய்ச்சல் முடிந்து தொழுவத்தில் கட்டி வைக்க கூட்டிச் சென்றான். அச்சமயம் அங்கு வந்த குரு, "சீடனே. பசுவுடன் நீ வருகிறாயா? அல்லது பசு உன்னுடன் வருகிறதா? பசுவை நீ ஓட்டுகிறாயா? பசு உன்னை அழைத்துச் செல்கிறதா? எனக் கேட்டார்.

குழம்பிய சீடன், "சுவாமி என்ன சொல்ல வருகிறீர்கள்" எனக் கேட்டான்.

இந்தப் பசுவை நீதானே பராமரிக்கிறாய்? இது உன் பேச்சைக் கேட்காதா? ஏன் கயிறு கட்டி இழுத்துச் செல்கிறாய்?

"கயிறை விட்டால் அது ஓடிவிடும்"

"அப்படியென்றால் பசு உன் கட்டுப்பாட்டில் இல்லைதானே?" என்றார்.

"குருவே, பசு எனக்குப் பழக்கம் தான் பன்னிரண்டு வருடங்களாகப் பராமரிக்கிறேன். என்றாலும், அது எங்காவது ஓடி விடக்கூடாது என்பதால் அதைக் கயிறு கட்டி அழைத்து வருகிறேன்" என்றான்.

"உன்னைப் போலத்தான் இறைவனும், மனிதர்களாகிய நாம் கட்டுப்பாடு தளர்ந்து, சீரழிந்து விடக்கூடாது என்பதற்காக, இறை நம்பிக்கை கொண்டு நம்மைக் கட்டுப்படுத்தி நேர்வழியில் செலுத்துகிறார் என்று அன்றைய கேள்விக்கு பதிலாகச் சொன்ன இக்கதை இறை நம்பிக்கைக்கு விளக்கம் தருகிறது.

இக்கதைக்கு வலுசேர்க்கும் வகையில் நீதி வெண்பா.

**"சிவனே சிவனே சிவனேயென் பார்பின்**
**சிவனுமையாளோடும் திரிவன்:- சிவனருளால்**
**பெற்ற இளங்கன்றைப் பிரியாமல் பின்னோடிச்**
**சுற்று பசுப்போல் தொடர்ந்து."**

பிறந்த கன்றொன்று பெற்ற தாயிடம் மிகுந்த பாசம் கொண்டாலும், துள்ளி விளையாடும் விளையாட்டால் தூரதூரமாகச் செல்லும். அப்போது பசு அதைப் பிரிந்து விடாமல் அதன் பின்னே தொடர்ந்து ஓடி அதைச் சுற்றி வரும். அதுபோல சிவனே! சிவனே என்று மனம் உருகிச் சொல்லுவார் பின்னே அச்சிவன் தன் பார்வதியோடு அவர்களைச் சுற்றியே இருப்பார் என்கிறது.

மனிதனுடைய மனம் பலமற்ற கொடியைப் போன்றது, அதனால் தனித்து நிற்கவோ, செயல்படவோ இயலாது. அதற்கு பற்றிக்கொண்டு எழத் துணையாக இறைவனைக் கொண்டான். சடங்குகளையும் நம்பிக்கைகளையும் மனதில் கொண்டு இறை நம்பிக்கையோடு வாழ்பவனானான். அவ்வாறான நம்பிக்கையில் பலவற்றை நாம் பின்பற்றுகிறோம். அறிவியல் பூர்வமாக அதில் உண்மைகளும் அடங்கும்.

* கோயில்களில் நேர்மறை அதிர்வுகள் அதிகமாக இருப்பதும்,

* கோயிலின் மூலஸ்தானத்தில் பூமியின் அதிகபட்ச காந்த அலைகள் எழுவதாகவும் ஆய்வுகள் சொல்லுகின்றன. காந்த அலைகளும், நல்ல அதிர்வுகளும் ஒருவருக்கு நல்ல மனநிலையைக் கொடுக்கின்றது.

* கோயிலுக்குச் செல்கிறபோது, இறைவனை பார்த்தல், நல்ல இசை, மந்திரங்களைக் கேட்டல், கற்பூர தீபாராதனை போன்ற நல்ல வாசனையை நுகர்தல், பிரசாதத்தை ருசித்தல், நல்ல அதிர்வுகளை உணர்தல் என ஐந்து புலன்களும் தூண்டப்படுதல்.

* கோயில்களில் உள்ள ஆலய மணிக்குப் பின் பெரும் அறிவியல் இருப்பதாக சொல்லப்படுகிறது. மணி என்பது ஒரே ஒரு உலோகத்தால் ஆனது அல்ல. கேட்மியம், ஈயம், துத்தநாகம், தாமிரம், நிக்கல், குருமம் மற்றும் மங்கனம் என்ற பல உலோகத்தால் ஆனவை. இதிலிருந்து வரும் ஓசை மனித உடலுக்குள் ஊடுருவி மனதை அமைதி அடையச் செய்கிறது.

* தேங்காய் உடைக்கும் நிகழ்விலும் நம்பிக்கை நிலவுகிறது. கண் உள்ள மூடி நமக்கும், மற்றைய பகுதி அர்ச்சகருக்கும் என்ற வகையில் அதில் எவ்வித உடைசல் ஏற்படாதும், கெட்டுப் போகாதும் இருப்பதே சிறப்பு என நம்புகிறோம்.

இதுபோன்ற பல அறிவியல் பூர்வமான நம்பிக்கையைப் பழக்கமாகக் கொண்டுள்ளோம்.

**உணவு நம்பிக்கை:**

உணவு என்பது ஓர் உயிரினத்திற்குத் தேவையான ஊட்டச்சத்து கிடைப்பதற்காக உண்ணப்படும் எந்தவொரு பொருளையும் குறிக்கும். மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று உணவு. தமிழர் உணவு முறைகளில் பலவகையான நம்பிக்கைகள் உண்டு.

தமிழர் உணவு முறை குறித்து விக்கிப் பீடியாவில், "பசித்தபின் சாப்பிட வேண்டும். நாக்கால் ருசித்தபின் சாப்பிட வேண்டும். சீராகத் தூங்கிய பின் சாப்பிட வேண்டும். இரசாயன உணவைத் தவிர்த்து இயற்கை உணவை சாப்பிட வேண்டும், அளவோடு சாப்பிட வேண்டும், வயிற்றில் உணவு ஜீரனித்தப் பின் சாப்பிட வேண்டும், கவலையின்றி அமைதியுடனும் மகிழ்வுடனும் இருக்கும் போது சாப்பிட வேண்டும்" என்று எப்படிச் சாப்பிட வேண்டும் என பட்டியலிடுகின்றது. இப்பட்டியலைச் சார்ந்தே நமது நம்பிக்கைகள் தொடர்கின்றன.

உணவியல் நிபுணர் தாரணி கிருஷ்ணன், "உணவு உண்ணும் நேரம், உடல் எடை, ஆரோக்கியம் ஆகியவற்றுக்கு நேரடித் தொடர்பு இருப்பதாகக் கூறுகிறார். இக்கருத்தையே வள்ளுவர்,

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்"

(குறள் 942)

உண்ட உணவை செரிப்பதற்கான கால இடைவெளி தந்து உணவு உண்ணும் உடலுக்கு வேறு மருந்தே தேவையில்லை என்று சொல்வதால், உடலுக்கு மருந்து, 'உணவு'தான் என்பதை உணர்த்துகின்றது.

உடலுக்குத் தேவையான உணவு ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும். அன்றைய உணவுகள் விவசாயிகளால் ஆரோக்கியமானதாக வழங்கப்பட்டது. சிறந்த தரமான உணவுப் பெருளின் வளர்ச்சிக்கு முளைப்பாரி போடும் நம்பிக்கை சான்றாகிறது.

**முளைப்பாரி போடுதல்:**

விவசாயிகள் பருவம் பார்த்து விவசாயம் செய்து அறுவடை செய்யும் நேரத்தில் முதலில் அடுத்த போகத்திற்கான தரமான விதைகளை வெயிலில் காய வைத்து பாதுகாப்பார்கள். பாதுகாத்த விதைகளை அடுத்த பருவத்தில் விதைப்பதற்கு முன் விதைகளின் முளைப்புத்திறனை சோதனை செய்த பிறகே விதைப்பது தமிழர்களின் பன்னெடுங்கால வழக்கமாக இருந்திருக்கிறது. அப்படி நம் முன்னோர்கள் குழுவாகச் சேர்ந்து கூட்டு முயற்சியாகச் செய்தது தான் முளைப்பாரித் திருவிழாவாகும்.

முளைப்பாரி என்னும் அரிய தொழில்நுட்பத்தை இப்போதுள்ள விவசாயிகள் கண்டுகொள்ளாத காரணத்தால் இன்று பல ஆயிரம் பாரம்பரிய விதைகளை இழந்து விட்டோம். அதனால் மரபணு மாற்றம் பெற்ற வீரியம் இல்லாத விதைகளை வாங்குகின்ற அவலம்.

ஒவ்வொரு காய், கனி, பூக்களிலும் விதைகள் அவசியம். மறுசுழற்சிக்கு அவைதான் வித்தாகின்றன. ஆனால் இன்றைய காலகட்டங்களில், விதையில்லாத பழங்களும், காய்களுமே நமக்குப் பிடிக்கின்றது. பற்களுக்கு வேலையே இருக்கக்கூடாது என்று எதிர்பார்க்கின்றனர். விதைகளற்ற எவ்வித உணவுப் பொருளும் நமக்கு ஆரோக்கியம் தருவதில்லை.

பாரம்பரிய இயற்கை உணவு இல்லாமல் பலர் துன்பப்படுகின்றனர். உடம்பில் ஏற்படும் சில பல மாற்றங்களுக்கும் இதுவே காரணம். உணவியல் மாற்றமே மரபியல் மாற்றம். மரபியல் மாற்றத்தால் இனப்பெருக்க இன்மை ஏற்படுகிறது. உதாரணமாக, தற்போது பெருகி வரும் செயற்கை கருத்தரிப்பு மையம் ஆகும்.

பத்து குழந்தைகள் தவழ்ந்த வீட்டில் ஒரு குழந்தை தவழ எத்தனை வேண்டுதல்கள்... எண்ணிலடங்காதவை.

**மழை பற்றிய நம்பிக்கை:**

பருவ நிலைகள் மாறப் போவதை எறும்புகள், பூனைகள், விலங்குகள் உள்ளிட்ட உயிரினங்கள் உணர்ந்துகொண்டு அதற்கேற்ப செயல்படும். இவ்வுயிரினங்களின் செயல்பாடு களைப் பார்த்து அடுத்து என்ன நிகழும் என்று பழந்தமிழ் மக்கள் அறிந்து கொண்டனர். எறும்புகள் தங்களது முட்டைகளைக் கொண்டு மேட்டு நிலப்பகுதிக்குச் சென்றால் மழையானது பெய்யும் என்று நம்பினர். இன்றும் கிராமப் புறங்களில் இந்நம்பிக்கை மக்களிடையே காணமுடிகிறது. இன்றும் நமது வீடுகளின் சுவரில் மழைக் காலத்துக்கு முன்பு எறும்புகள் தன் முட்டைகளைத் தூக்கிக்கொண்டு படைபோலச் செல்வதைக் காண்கிறோம். காரணம், மழை வரும் முன்னே பாதுகாப்பான ஓர் இடம் தேடி தன் முட்டைகளைப்

பாதுகாக்கவே அவ்வாறு செய்கிறது. மழைவரும் என்பதை முன்கூட்டியே அறியும் ஆற்றலையும் கொண்டுள்ளது. மேலும் தட்டான்பூச்சி தாழப் பறப்பதும் தவளை கத்துவதும் மழைவருவதற்கான அறிகுறி என்ற நம்பிக்கை அனைவரிடமும் உள்ளது. மழை நம்பிக்கை குறித்த பாடல்,

"அஞ்சாந்தேதி இடிச்சா ஆல செவுத்துமேல நெல் வெளையும்
ஆறாந்தேதி இடிச்சா ஆல இலை மேல நெல்வெளையும்
எட்டாந் தேதி இடிச்சா எட்டிப் பார்க்க ஒண்ணும் இல்ல
பத்தாந் தேதி இடிச்சா பாறை மேல நெல் வெளையும்"

(ஆல செவுத்துமேல - கரும்பு ஆலைக் கொட்டகையின் சுவற்றின் மீது) மேற்குறிப்பிட்ட நாட்களில் எட்டாந்தேதியைத் தவிர, பிற நாட்களில் இடிமின்னல் தோன்றினால் தான் அதிக அளவில் மழைவரும் என்றும் எட்டாந்தேதி இடித்தால் மழை பொய்க்கும் என்பதும் நம்பிக்கையாகும். மழை வருமா? வராதா? என்ற கேள்விக்கு இன்று விஞ்ஞானத்தில் பதிலுண்டு. அன்றைய மக்கள் 'வானம் பார்த்த பூமி'யாக மழைக்காலத்தை அனுபவத்தால் உணர்ந்தே பயிர் செய்தனர். பொதுவாக தமிழகத்தில் இரு பருவக்காற்று மழையைக் கொடுக்கும் என குறிப்பிடுவார்கள். வடகிழக்கு பருவக் காற்று, தென்மேற்கு பருவக் காற்று என்ற இரண்டு பருவக் காற்றும் நமக்கு மழைப்பொழிவைத் தரும் என கிராமப்புற மக்களின் நம்பிக்கையாகும். இந்த நம்பிக்கை அறிவியல் பூர்வமானது என்று நாம் நம்பும் வகையில் இயற்கை தூக்கணாங்குருவியைப் படைத்துள்ளது. ஆம் ஆறறிவு உடைய நாம் அதன் விஞ்ஞான தொழில்நுட்பத்தைக் கண்டு தலைவணங்க வேண்டும். தூக்கணாங்குருவி தனது கூட்டை பருவமழைக்குத் தக்கவாறு பாதுகாப்பாக அமைக்கின்றது.

தென்மேற்குப் பருவக்காற்று வீசும் போது அதன் எதிர்திசையான வடகிழக்குப் பகுதியில் வாசலை அமைக்கும் தன்மையையும் இயற்கையின் சூழலையும் தட்ப வெப்பத்தையும் உணர்ந்துள்ளது. மேலும் ஆட்காட்டி, அல்லது வானம்பாடிப் பறவை என்று சொல்லுவார்கள். இந்தப் பறவை எந்தத் திசையை நோக்கி கூட்டமாக சத்தம் போட்டுச் செல்கின்றதோ அந்தத் திசையில பெருமழை பெய்கிறது; 'கடுங்காத்து மழையாகும்' என்ற பொன்மொழியும் மழைபற்றிய நம்பிக்கையை உணர்த்துகிறது.

**கண்திருஷ்டி (அ) கண்படுதல்:**

வாழ்வில், ஏதேனும் ஒரு நல்லது நடந்தாலும் கெட்டது நடந்தாலும் நம் வீட்டில் சொல்லும் விஷயம்.... திருஷ்டி சுத்திப் போடுங்க... என்பதுதான். கெட்ட எண்ணங்களின் தாக்குதல்தான் கண் திருஷ்டி என்கிறார்கள். இதை கண்ணேறு என்றும் சொல்லுவார்கள்.

சில கண்களுக்குத் தீமை விளைவிக்கும் சக்தி உண்டு. அத்தகையோரின் கண்பட்டால் குழந்தைக்கு நோய்நொடி வரும் என அக்கால நாட்டுப்புற மக்கள் நம்பினர். எனவே தான் கல்லடி பட்டாலும், கண்ணடி படக்கூடாது என்ற பழமொழியை,

"கல்லீட்டிற்கு ஒதுங்கினாலும்
கண்ணீட்டிற்கு ஒதுங்க இயலாது"

என்ற வாக்கையும் பயன்படுத்துகிறார்கள்.

திருஷ்டிக்கண் படுதலிலிருந்து குழந்தைகளைக் காக்க, சுண்ணாம்பும், மஞ்சளும் கொண்டு குழந்தைமேல் சுற்றிப் போடும் பழக்கத்தை,

"கண்ணான கண்ணார்க்கு கண்ணோக்கும் வாராமல்
சுண்ணாம்பும் மஞ்சளும் சுற்றி எறி கண்ணார்க்கு"

என்ற இப்பாடல் கண்திருஷ்டிப் படுதலிலிருந்து தன்னைப் பாதுகாக்கும் முறையைக் கூறுகின்றது.

நம் வீட்டில் குழந்தைகளுக்குச் சூடம் சுற்றி வீட்டின் முன் எரிய விடும் பழக்கமும், வியாழன், ஞாயிறு அன்று வீட்டில் உள்ள அனைவரையும் வரமிளகாய், கடுகு, உப்பு போன்ற பொருள்களைப் படியில் எடுத்துக் கொண்டு அனைவரையும் சுற்றி நெருப்பில் போடும் பழக்கமும் இன்றளவும் பின்பற்றுகிறோம்.

**கண் திருஷ்டி குறித்து பிரபல தத்துவ ஞானி**

பிரான்சிஸ் பேகன், ஒருவருக்கு பொறாமை மேலிடும் போது முதலில் அது அவரது கண்களில் தான் வெளிப்படுகிறது என்கிறார். மனிதனின் கண்களிலிருந்து வெளிவரும் ஆற்றல் சில சமயங்களில் மிருகங்களை அல்லது குழந்தைகளைக் கூடக் கொல்லும் ஆற்றல் படைத்தது. சிலருக்கு இன்னும் அதீதமான ஆற்றல் கண் பார்வையினாலேயே சாபம் இட வல்லவர்கள் என்று திருஷ்டியை அறிவியல் ரீதியில் விளக்கம் அளித்த அறிஞர் ப்ளூடார்க் அவர்களின் கருத்து இங்கு ஏற்புடையது.

இதற்கு இன்னும் பயன்பாட்டில் உள்ள பல முறைகளைப் பட்டியலிடலாம்.

• திருஷ்டியிலிருந்து தன்னைக் காக்க, தாயத்துகளை அரைஞாண் கயிற்றில் ஆரம்பித்து, மணிக்கட்டு, கழுத்து போன்ற இடங்களிலெல்லாம் அணிந்து கொள்வது.

• கண்ணுக்கு அழகூட்டுவதற்காக மட்டும் தமிழ் மங்கையர் மையைத் தீட்டிக் கொள்ளவில்லை. தன்னைத் தீய பார்வையிலிருந்து காத்துக் கொள்வதற்காகவும் மையைத் தீட்டிக் கொள்கின்றனர். குழந்தைகளுக்கும் மை தீட்டும் தாய்மார் மறந்துவிடாமல் அதே மையினாலேயே குழந்தையின் கன்னத்தில் ஒரு திருஷ்டிப் பொட்டை வைக்க மறக்க மாட்டார்கள்.

• மணமக்கள் வீட்டிற்குள் நுழைவதற்கு முன்னர் அவர்களை வாசலிலேயே நிறுத்தி வைத்து வீட்டில் அவர்களுக்கு மிகவும் வேண்டியவர்கள், வயதானவர்கள் கற்பூரத்தை ஏற்றி அவர்களைச் சுற்றி திருஷ்டி கழிப்பது பழக்கம். மேலும் நவரத்தினங்களை அணியும் பழக்கமும் இவற்றைப் போக்க பயன்படுத்துகின்றனர்.

• உப்பு மனிதர்களை தீய திருஷ்டியிலிருந்து காக்கிறது என்பதையும் அது சற்று வெப்பப்படுத்தப்பட்டாலோ, அல்லது மேலே தெளிக்கப்பட்டாலோ அதன் சக்தி இன்னும் மிக அதிகமாகிறது என்பது நம்பிக்கை.

உப்பு, மஞ்சள் சிறந்த கிருமி நாசினி என்பது இன்றைய மக்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கக் கூடும். காரணம் கொரோனாவால் துன்பப்பட்டு பயந்து நாம் நம்பிக்கையில் பயன்படுத்திய பொருட்கள் ஏராளம். அவற்றுள் மிக முக்கியமானது உப்பு மஞ்சள், வேப்பிலை, துளசி இன்னும் பல உள்ளன.

தொண்டை கரகரப்பாக இருந்தால் உப்புநீர் கொப்பளிக்கிறோம், உப்பு மஞ்சள் நீரால் ஆவிபிடிக்கிறோம். பழங்களை உப்புநீரால் கழுவிப் பயன்படுத்துகிறோம். மஞ்சள் கட்டையை கல் உப்பினுள்ளே பல நாட்களுக்கு போட்டு வைத்திருப்பார்கள். குழந்தைகளின் வயிற்றுப் பிரச்சனைகளுக்கு அம் மஞ்சளை அரைத்துக் கொடுக்கும் வழக்கம் இன்றும் உண்டு.

இதுபோல பல நம்பிக்கைகள் அறிவியல் பூர்வமாக நம்பப்பட்டு பயன்பாட்டில் உள்ளதை மறுக்க முடியாது.

நம்பிக்கைகள் பல. நாட்டுப்புற மக்கள் நம்பும் ஒவ்வொன்றிலும் மனித வாழ்க்கை சிறக்கவும் இயற்கையோடு இயைந்து வாழும் முறையைச் சுட்டிக்காட்டுவதும், உடல் நலம் பெறவும் வழிவகை செய்கிறது. 'நம்பிக்கையே பலம்' என்பதை மனதில் கொண்டு நாட்டுப்புற மக்கள் வாழ்கின்றனர்.